## இது ஏன் முக்கியம்?

### பாரபட்சத்தை உருவாக்கும் மற்றும் வன்முறையை நீடிக்கும் காலனித்துவ கால சட்டங்களை ரத்து செய்வோம்.

நல்லாட்சி அரசாங்கம் மனித உரிமைகளை பாதுகாக்கவும் வளர்க்கவும் வாக்குறுதி அளித்ததால், பெண் ஓரின சேர்கையாளர்கள் (Lesbian), ஆண் ஓரின சேர்கையாளர்கள்(Gay), இரு பால் பாலியல் நாட்டம் கொண்டோர் (Bisexual), பால் நிலையில் மாற்றம் கொண்டோர் (Transgender), ஆண் மற்றும் பெண் உறுப்பு களை கொண்டோர்(Intersex) மற்றும் தனிப்போக்குள்ள (Queer) சமூகத்தை சார்ந்தோர் (*LGBTIQ*) என தம்மை அடையாளப்படுத்தி கொள்ளும் பிரஜைகள் உட்பட அனைத்து பிரஜைகளையும் பாரபட்சம், துன்புறுத்தல், வன்முறை மற்றும் ஏனைய அத்துமீறல்களில் இருந்து பாதுகாப்பதற்கு இவ் அரசாங்கம் நடவடிக்கை எடுப்பது முக்கியமாகும். *LGBTIQ* நபர்களை பாதிக்கும் சட்டங்களை, குறிப்பாக ஓரின சேர்க்கையில் ஈடுபடுவதை தண்டிக்கும் மற்றும் *LGBTIQ* நபர்களை தொடர்ந்து துன்புறுத்த பயன்படும் குற்றவியல் சட்டத் தொகுப்பின் 365 மற்றும் 365(அ) பிரிவுகள் போன்ற சட்டங்களை, சீர்திருத்துவதற்காகவும் நீக்குவதற்காகவும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் 2017-2021 ஆண்டுகளின் தேசிய மனித உரிமைகள் நடவடிக்கை திட்டத்தில் இருந்து நீக்கப்பட்டதாக அண்மையில் வெளியான ஊடக செய்திகள் குறிப்பிடுகின்றன. காலனித்துவ காலத்தில் இருந்து நடாத்தப்பட்டு வரும் இந்த முறைப்படியான வன்முறையையும் பாரபட்சத்தையும் நிறுத்துவதற்கான சட்ட ரீதியான கொள்கைகளை உருவாக்காமல், *LGBTIQ* நபர்களை, வன்முறைக்கும் பாரபட்சத்திற்கும் பலியாக்கும் அரசாங்கத்தை, இதில் கையொப்பமிடும் நாங்கள் கடுமையாக கண்டித்து, எங்கள் கோபத்தையும் கவலையையும் தெரிவிக்கின்றோம்.

உலகளாவிய மனித உரிமை மதிப்பீடுகளை பின்பற்றுவதாகவும் அதன் சர்வதேச மனித உரிமை கடப்பாடுகளுடன் இசைந்து கொள்வதாகவும், அனைத்து பிரஜைகளுக்கும் அடிப்படை உரிமைகள் உள்ளன என உறுதிமொழி அளிக்கும் இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பு போன்ற தேசிய

கட்டமைப்புகளை சீர்திருத்துவதாகவும் செயலாக்குவதாகவும் **நல்லாட்சி** அரசாங்கம் அறிவித்தது. அரசியலமைப்பின் 4(ஊ) பிரிவின் கீழ் உள்ள மனித உரிமைகளை "மதிக்கவும், பாதுகாக்கவும், முன்னேற்றவும்" உள்ள கடப்பாடுகளை நிறைவேற்ற தேவையான சட்ட ரீதியான சீர்திருத்தங்களையும் கொள்கைகளையும் அரசாங்கம் அடையாளம் காணும் ஒரு வழிமுறை தேசிய மனித உரிமைகள் நடவடிக்கை திட்டத்திம் ஆகும்.

தேசிய மனித உரிமைகள் நடவடிக்கை திட்டத்ததை உருவாக்குவதில் குறிப்பிட்ட குடிமக்களின் பங்கேற்றம் இருந்தாலும், இந்த வழிமுறை அவசரமான முறையில் நடத்தப்பட்டதால், பொதுமக்களின் பங்கேற்பிற்கு இடம் இருக்கவில்லை. அமைச்சரவைக்கு வழங்கப்பட்ட இறுதி வரைவு 300 பக்கங்களுக்கு மேலானதாக காணப்பட்டது எனவும், மனித உரிமைகளுடன் தொடர்புள்ள பிரச்சனைகளையும் இடைவெளிகளையும் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை கொண்டு இருந்ததாகவும், **குற்றவியல்** சட்டத்தொகுப்பின் பிரிவுகள் 365 மற்றும் 365(அ) என்பவற்றை ரத்து செய்வதற்கான திட்டங்களை கொண்டிருந்ததாகவும் அதிகார பூர்வமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. பாலியல் நாட்டம் மற்றும் பாலியல் அடையாளம் போன்றவற்றின் காரணமாக பாரபட்சப்படும் மக்களை காப்பாற்ற எழுதப்பட்ட தேசிய மனித உரிமைகள் நடவடிக்கை திட்ட வரைவை அமைச்சரவையில் உள்ள அமைச்சர்கள் திருத்தியதாகவும் பிரிவுகள் 365 மற்றும் 365(அ) என்பவற்றை ரத்து செய்வதற்கான முடிவை விலக்கியதாக அமைச்சரவை பேச்சாளர் மற்றும் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறியதாக ஊடக செய்திகள் தெரிவிக்கின்றன. தேசிய கலாச்சாரத்தை பாதுகாக்கும் பொருட்டு இவ்வாறு செய்ததாக சில ஊடங்களை கூறின. தேசிய மனித உரிமைகள் நடவடிக்கை திட்டத்தில் காணப்பட்ட வீதியில் திரிதல், மனைமுறைப் புணர்ச்சி போன்ற ஏனைய விடயங்களும் கைவிடப்பட்டதாக சில தகவல்கள் தெரிவித்தன.

இந்த நாட்டிற்கு அந்நியமான, விக்டோரியன் விழுமியங்களை அடிப்படையாக கொண்ட, காலனித்துவ சட்டங்களை ஒழிக்காமல், துன்புறுத்தல், துஷ்பிரயோகம், அநீதி மற்றும் பாரபட்சம் போன்றவற்றை உருவாக்கும் தொன்மையான மற்றும் பாரபட்சமான சட்டங்களையும் நடைமுறைகளையும் தொடர்வதற்கு அரசாங்கம் முடிவு செய்து உள்ளது கவலைக்குறியதாகும். ஓரினசேர்க்கையில் ஈடுபடுவதை தண்டிக்கும் சட்டங்கள் இலங்கையில் பிரித்தானிய ஆட்சியின் போது செயற்படுத்தப்பட்டவை ஆகும். இதற்கு சமமான பிரித்தானிய சட்ட பிரிவுகள் ஏனைய நாடுகளில் ரத்து செய்யப்பட்டு உள்ளன. மேலும், ஓரின சேர்க்கை பிரித்தானிய ஆட்சிக்கு முன் இலங்கையில் தண்டிக்கப்பட்டது என கூற எந்த விதமான சாட்சியும் இல்லை. வன்முறை, துஷ்பிரயோகம், தவறான நடைமுறை மற்றும் பாரபட்சம் போன்றவற்றை நியாயப்படுத்த, காலனித்துவ விழுமியங்களை இலங்கை கலாசாரம் என குறிப்பிட்டு, அரசாங்கம் பொது மக்களை தவறான வழியில் கொண்டு செல்வது அவமானமான மற்றும் ஒப்புக்கொள்ள முடியாத ஒரு விடயமாகும்.

இலங்கையில் *LGBTIQ* சமூகங்களை அமைதிப்படுத்தும்' வழக்கம் சட்டரீதியாகவும் நடைபெறுகிறது. எளிதில் இலக்காகக்கூடிய ஒரு சமுதாயம் மறுக்கப்படுவது மட்டும் இல்லாமல், மற்றைய சமுதாயங்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பும் உரிமைகளும் கூட இந்த சமுதாயத்திற்கு மறுக்கப்படுகின்றன. *LGBTIQ* சமுதாயம் தம்மை இந்த ஒரு சட்ட பிரிவால் அடையாளப்படுத்தி கொள்ளாமல், தமது பிரஜை உரிமையின் மூலம் அடையாளப்படுத்தி கொண்டாலும், இந்த சட்டம் நாடெங்கும் உள்ள வெவ்வேறு வர்க்கங்கள், இனங்கள் மற்றும் பொருளாதார பிரிவுகளை சேர்ந்த *LGBTIQ* நபர்களின் தினசரி வாழ்க்கையை பாதிக்கிறது. 365 மற்றும் 365(அ) பிரிவுகளின் அடைப்படையில் இதுவரை யாரும் தண்டிக்கப்பட்டது இல்லை என அரசு விவாதித்தாலும், இந்த சட்டங்கள் காரனமாக சம்மதம் தெரிவிக்கக்கூடிய வயது வந்தவர்களுக்கு இடையே நடைபெறும் பாலியல் உறவுகளை தண்டிக்கப்படும் வகையில் பார்க்கின்றன.

இது *LGBTIQ* சமூகத்தினுள் குறிப்பிட்ட மற்றும் பல பாதிப்புகளை ஏற்படுத்தி உள்ளது.

தனியார்  மற்றும் அரசு அலுவலர்கள் காரணமாக பாலியல் வன்புணர்வு, உடல் சார்ந்த, சொல் சார்ந்த மற்றும் உணர்ச்சிகளை பாதிக்கும் துஷ்பிரயோகத்திற்கு *LGBTIQ* சமூகத்தினர் பல வருட காலங்களாக முகம் கொடுத்து உள்ளனர். *LGBTIQ* நபர்களை களங்கப்படுத்தவும் அவர்கள் மீது பாரபட்சம் காட்டவும் சட்டம் ஒரு கட்டமைப்பை வழங்கி உள்ளதாலும் தண்டிக்கும் ஒரு சமுதாயத்தை உருவாக்கி உள்ளதாலும், இந்த நாட்டு பிரஜைகள் சட்டத்தின் முழு பாதுகாப்பை பெற முடியாமலும் வன்முறைக்கு எதிராக பேச முடியாமலும் உள்ளனர். இது மனச்சோர்வு, உளைச்சல், தனிமை, மறுப்பு மற்றும் தற்கொலை போன்றவற்றை தூண்டுகின்றன. இது இலங்கை பிரஜைகளை தமது உடல் நாணயம், பாலியல் சதந்திரம், சமத்துவம் மற்றும் பாரபட்சம் இல்லாமை போன்றவற்றின் மீது உரிமை கொண்டாடுவதில் இருந்து தடுக்கிறது. சட்டத்துறையினாலோ அல்லது வேறு வழியாகவோ இந்த அநீதிகளுக்கு புறக்கணிக்கத்தக்க தீர்வுகள் வழங்கப்பட்டு உள்ளன. இவ்வகையான பாரபட்சமான சட்டங்கள் குற்றங்களை பதிவு செய்வதில் இருந்தும் மக்களை தடுப்பதால், இந்த துஷ்பிரயோகங்கள் தொடர்வதற்கு தூண்டுதலாக அமைகின்றன.

மேலும்,  365 மற்றும் 365(அ) பிரிவுகள் அரசியலமைப்பின் மூலம் வழங்கப்பட்ட பல மனித உரிமைகளை அத்துமீறுகின்றன: 'இயற்கையான' மற்றும் 'இயற்கைக்கு மாறான' உடலுறவு பற்றி விதிகட்டற்ற கருத்துகளை சட்டரீதியாக புகுத்துவதாலும், தனிமையில் செய்யப்படும் பாலியல் உறவுகள் 'நாணமில்லாமல்' இருப்பதன் காரணமாக அவற்றை தண்டிப்பதாலும், இந்த பிரிவுகள், பிரிவு 14(1)(அ) இன் கீழ் வாக்களிக்கப்பட்ட உணர்ச்சி வெளிப்பாட்டிற்கான சுதந்திரத்தை அத்துமீறுகின்றன. சம்மதம் தெரிவிக்க கூடிய இரு வயது வந்தோருக்கு இடையில் தனிமையில் நடைபெறும் பாலியல் நடவடிக்கைகளை தடை செய்வதால், யாருக்கும் இடையூறு செய்ய உரிமை இல்லாத தனியார் உறவுமுறைகளை அரசு இடையூறு செய்வதால், பிரிவு

14 (1)(சி) இன் கீழ் உள்ள தொடர்புகொள்ளுவதற்கான சுதந்திரத்தை அத்துமீறுகிறது. அதிக மக்கள் கொண்ட குழுக்களை போலீஸ் துஷ்பிரயோகம், வேலைவாய்ப்பு பாரபட்சம், சுகாதார சேவைகளில் இருந்து மறுப்பு போன்றவற்றிக்கு முகம் கொடுக்க செய்வதால், அரசியலமைப்பின் 12ஆம் பிரிவின் கீழ் உள்ள சமமான பாதுகாப்பு மற்றும் பாரபட்சம் இன்மை என்பவற்றை இந்த பிரிவுகள் அத்துமீறுகின்றன.

யுத்தத்தின் பின் மீட்படைந்து வரும் மற்றும் முரண்பாடுகள் மாற்றமடைந்து வரும் இந்த கால கட்டத்தில், அரசாங்கம் இரண்டு ஆலோசனை வழிமுறைகளை உருவாக்கி உள்ளது - அரசியலமைப்பு சீர்திருத்தங்களுக்கான மக்கள் ஆலோசனை குழு மற்றும் சமரச வழிமுறைகளுக்கான பொது ஆலோசனை பணிப்பிரிவு. இவை சில சட்ட மற்றும் கொள்கை மாற்றங்களில் பொது மக்களின் கருத்துக்களை உட் சேர்க்க உருவாக்கபட்ட வழிமுறைகள் ஆகும். இந்த இரண்டு வழிமுறைகளும் பாலியல் நாட்டம் மற்றும் பால்நிலை அடையாளம் பற்றி கருத்துகள் வழங்கப்பட்டதாகவும், இவை பாரபட்சம் மற்றும் துன்புறுத்தல் போன்ற பிரச்சனைகளை தீர்க்கும் வகையில் அரசியலமைப்பு சார்ந்த, சட்ட ரீதியான மற்றும் நிறுவனம் சார்ந்த நடைமுறைகளை எடுக்குமாறும் கூறியதாக தெரிவித்தன. இந்த இரு வழிமுறைகளும் தேசிய ரீதியில் நடத்தப்பட்டவை. இவை இலங்கையர்கள் தினசரி வாழ்வில் முகம் கொடுக்கும் சவால்களை முகம் கொடுக்க தேவையான மாற்றங்கள் என்னவென அறிய செயல்பட்டன.

**இதன் காரணமாக பெண் ஓரின சேர்கையாளர்கள் (Lesbian), ஆண் ஓரின சேர்கையாளர்கள்(Gay), இரு பால் பாலியல் நாட்டம் கொண்டோர் (Bisexual), பால் நிலையில் மாற்றம் கொண்டோர் (Transgender), ஆண் மற்றும் பெண் உறுப்பு களை கொண்டோர்(Intersex) மற்றும் தனிப்போக்குள்ள (Queer) சமூகத்தை சார்ந்தோர் (*LGBTIQ*) என சுய அடையாளம் கொண்ட நபர்களாகிய நாங்கள், *LGBTIQ* நபர்களின் குடும்ப அங்கத்தவர்கள் மற்றும் நண்பர்களாகிய நாங்கள்,**

இலங்கையில் உள்ள ஒரு சமூகத்திற்கு ஆதரவாக முன் வரும் நபர்களாகிய/சமூகங்களாகிய நாங்கள், இலங்கை அரசாங்கத்தை, மதிப்பிற்குரிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களை, மதிப்பிற்குரிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களை, இலங்கையின் பிரஜைகளுக்கு உள்ள தேசிய மற்றும் சர்வேதேச கடப்பாடுகளை பின்வருமாறு சந்திக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்:

1. *LGBTIQ* நபர்களுக்கு 2017-2021 தேசிய மனித உரிமைகள் நடவடிக்கை திட்டத்தினால் மற்றும் சம்பந்தப்பட்ட மதிப்பீடு வழிமுறைகளினால் நடாத்தப்பட்ட பாரபட்சத்தையும் வன்முறையையும் சரி செய்யும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என உறுதிப்படுத்தல்.

2. குற்றவியல் சட்டத்தொகுப்பின் 365 மற்றும் 365(அ) பிரிவுகளை ரத்து செய்தல்.

3. கட்டாகாளி சட்டத்தை ரத்து செய்தல்.

4. பாலியல் நாட்டம் மற்றும் பால்நிலை அடையாளம் என்பவற்றை அடிப்படையாக வைத்து மக்கள் மீது நடாத்தப்படும் பாரபட்சத்தை அரசியலமைப்பு சீர்திருத்தம் மூலம் ஒழித்தல்.